விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 365 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 03 புதன்கிழமை (18.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன தெரிவு



(கொழும்பு)

10ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக பொலநறுவை மாவட்டத்தின் எம்.பி ஜகத் விக்கிரமரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் நேற்று கூடிய போது புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது.

(05ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரிகளின் அசமந்தத்தால் தட்டாதெருவில் மின்னொழுக்கு

### தன் உயிர்கொடுத்து பல்லுயிர் காத்தது பசு



02

### போலி வாக்குறுதிகளை வழங்கிய அநுர அரசு

# ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

பொதுமக்களிடம் போலியான வாக்குறுதிகளை வழங்கியுள்ள அநுர அரசாங்கம் ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## எலிக் காய்ச்சல் யாழில் 99 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை 99 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் பரவல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

15

## 26 இலட்சம் ரூபாய் பண மோசடி

## யாழில் வர்த்தகர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில், 26 இலட்சம் ரூபாய் பணத்தினை மோசடி செய்த வர்த்தகர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் குறித்த

15

## மோ.சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

### தண்ணீரூற்று பகுதியில் சம்பவம்

(முல்லைத்தீவு)

வீதியால் நடந்து சென்ற குடும்பஸ்தர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

குமாரபுரம், முள்ளியவளையைச் சேர்ந்த கோவிந்தசாமி சிவானந்தன் (வயது-66) என்ற 6 பிள்ளை

15

## எமது ஆட்சியில் திருட்டு இல்லாததால் கல்வித் தகுதியைத் தேடுகின்றனர்

### சபையில் பிரதமர் ஹரிணி



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திருட்டுகள் தொடர்பில் தேட முடியாத காரணத்தினால் ஆளும் கட்சி உறுப்பினர்களின் தகுதிகள் பற்றி அறிய எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

கடந்த அரசாங்கங்களின் எம்.பி.க்கள் மற்றும்

15

## யாழின் காற்றின் தரம் தொடர்பில் ஆராய்க

### சுற்றாடல் அதிகார சபைக்கு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் காற்றின் தரம் தொடர்பில் ஒரு மாத காலத்திற்கு தொடர்ச்சியான பரிசோதனைகளை மேற்கொள்ளு

15

## அநுரவுக்கு ரணில் பாராட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

15

## நீண்டகால நட்புறவு வலுப்பெற வேண்டும்

### இலங்கை – இந்திய ஜனாதிபதிகள் கலந்துரையாடல்



(புதுடில்லி)

இலங்கை - இந்தியா இடையே நீண்ட கால நட்புறவு வலுப்பெற

15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9,500 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி

கடந்த 4 ஆம் திகதியிலிருந்து நேற்று மதியம் 12 மணி வரையான காலப்பகுதியில் நாட்டுக்கு 9,500 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத்தின் பேச்சாளர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, குறித்த காலப் பகுதியில் 3,300 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 6,020 மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு அனுமதிப் பத்திரமின்றி அரிசியை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 20ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கல்வித் தகைமைகளை இன்று சமர்ப்பிக்க தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

தனது சகல கல்வித் தகைமைகளையும் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனது சகல கல்வித் தகைமைகளையும் இன்று காலை இச்சபையில் சமர்ப்பிக்க உள்ளேன். பட்டச் சான்றிதழ் மட்டுமல்ல.

அதற்கும் அப்பாற்பட்ட அனைத்துச் சான்றிதழ்களையும் முன்வைக்க எதிர்பார்க்கின்றேன் என எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ம-7)

PREGNANCY VOUCHER
கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம் - கோப்பாய் பதிவுள்ளோர் மட்டும்)
Happy Super market - உரும்பிராய்
077 780 8030
(2786)

## அதிகாரி...

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி தட்டாதெரு சந்தியில் பாதசாரி கடவைக்கு அருகே அதிகாரிகளின் அசமந்தத்தால் இடம் பெற்ற மின் விபத்தில் பசு ஒன்று உயிரிழந்து பலரது உயிரை காப்பாற்றிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

யாழின் பிரதான சந்திகளில் ஒன்றானதும் தினமும் ஆயிரக் கணக்கிலானோர் பயணிக்க கூடியதுமாகிய குறித்த பகுதியில் மின் விளக்கினை சுற்றி கொடி வகை தாவரம் ஒன்று படர்ந்து மின்சார வடங்களிலும் சுற்றிப் பரவி உள்ளது.

இதனைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் எவரும் கவனிக்காது விட்டிருந்த நிலையில் நேற்று திடீரென மின்ஒழுக்கு ஏற்பட்டு குறித்த கொடி முழுவதும் மின்சாரம் பாய்ந்துள்ளது.

இதன்போது எதேர்ச்சியாக குறித்த கொடியினை உணவாக உட்கொள்ள விளைந்த பசு மீது மின்சாரம் தாக்கியுள்ளது.

இதனை அவதானித்த குறித்த வீதியால் பயணித்தவர்கள் மற்றும் அருகில் இருந்த கால்நடை மருத்துவர்கள் என பலரும் குறித்த பசுவை காக்க கடும் பிரயத்தனம் மேற்கொண்டிருந்த போதிலும் குறித்த பசுவின் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்தமையினாலும் குறித்த வீதியில் மழைநீர் தேங்கி நின்றமையினாலும் பசுவை காக்க முனைந்தவர்கள் மீதும் மின்சாரம் தாக்கியுள்ளது.

எனவே அவர்கள் பசுவினை காக்கும் முயற்சியில் இருந்து பின்வாங்க நேரிட்டது இந்நிலையில் அதீத மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான பசு பரிதாபகரமாக உயிரிழந்தது.

இது தினமும் பலரும் பயன்படுத்தும் பாதை என்பதனால் பசுவின் நிலை எவருக்கும் ஏற்பட்டிருக்கக் கூடும் எனவும் பெறுமதிமிக்க பசுவின் உயிர் பறிக்கப்பட்டமைக்கு உரிய அதிகாரிகள் பொறுப்பு கூற வேண்டும் எனவும் தெரிவித்து பொதுமக்களும் அவ் வீதியால் பயணித்தவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த மின்சார சபையினரால் இரண்டுக்கு மேற்பட்ட முறைகள் முயன்ற பின்னரே மின்னை கட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

ஆயினும் குறித்த பகுதியில் மின்சாரம் பாய்வதாக பொது மக்கள் குற்றம் சாட்டினர். இந்நிலையில் இதற்கு மின்சார சபையினர் தாம் பொறுப்பல்ல எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் யாழ் மாநகர சபையே இதற்கு பொறுப்பு எனவும் தெரிவித்தனர்.

இதனை ஏற்க மறுத்த பொது மக்கள் ஏனைய அதிகாரிகள் வரும் வரை அவர்களை அப் பிரதேசத்திலேயே தரித்திருந்து உரிய தீர்வை பெற்று தருமாறு கூறினர் எனினும் தாம் துரித சேவை இலக்கத்துடன் தொடர்பு பட்டவர்கள் எனவும் எனவே தம்மால் ஒரே பகுதியில் அதிக நேரம் தரித்திருக்க முடியாது எனவும் தெரிவித்த மின்சார சபை அதிகாரிகள் அவ்விடத்தில் இருந்து விலகினர்.

எந்த அதிகாரிகளும் குறித்த சம்பவத்திற்கு பொறுப்பேற்காத நிலையில் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள குறித்த பசுவின் உரிமையாளர் தீர்மானித்தார்.

அசம்பாவிதங்கள் நடந்த பிறகு நடவடிக்கைகள் எடுக்காது இவ்வாறான சம்பவங்கள் இனி மேல் இடம்பெறாத வகையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம். (ம-7)

## ஒரு வருட...

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போலி வாக்குறுதிகளை வழங்கி போலிக் கல்வித் தகைமைகளுடன் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, ஒரு மாதத்துக்குள் சபாநாயகரை இழந்துள்ளது.

அதியுயர் சபையில் போலிக் கலாநிதிப் பட்டத்துடன் சபாநாயகர் கதிரையை அலங்கரித்தவர், ஒரு மாதத்துக்குள் உண்மை நிலைமை வெளியில் தெரியவர பதவியில் இருந்து விலகியுள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் இனியாவது விழிப்படைய வேண்டும். ஒரு மாதத்துக்குள் சபாநாயகரை இழந்த அரசு, ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழப்பது உறுதி. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி விரைவில் மலரும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

பொங்கல் அகப்பை விற்பனைக்கு
தைப்பொங்கல் வியாபாரத்தை சிறப்பிக்க இன்றே முந்துங்கள்
• அகப்பைகள்
• விளக்குமாறு
• திருவுபலகை
• இருபலகை
• ரொட்டித்தட்டு

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.
077 2105 286
(2784)

தவறிவிட்டது
பொ.ஜெகானந்தராஜா (ஓய்வுநிலை ஆசிரியர் யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) என்பவரது தே.அ.அட்டை உட்பட பல முக்கிய ஆவணங்கள் யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தகவல் தரவும். இது மனிதாபிமான உதவியாக அமையும். சன்மானம் தரப்படும்.
077 662·4377
(C-1844)

வீடு வாடகைக்கு தேவை
யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு :
077 919 1529
(2783)

16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நல்லையா
தவகுலசிங்கம் (துவம்)
(முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் - காங்கேசன்துறை)
(அக்ரோ இயந்திரவியல் தொழிலக உரிமையாளர்)
மலர்வு 25.02.1947
உதிர்வு 16.12.2008
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
பிறரையும் வாழ வைத்த எங்கள்
குல விளக்கே!
ஆண்டுகள் பதினாறு ஆனதப்பா
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
குடும்பத்தினர்
(644)

UNICORN FACILITATORS (PVT) LTD.
புதிய பொருளாதார வளர்ச்சியில் பங்குதாரர்கள் ஆகுங்கள்
சர்வதேச வர்த்தக நுணுக்கங்கள், புதிய தொழில் முயற்சிகள் ஆரம்பித்தல், வங்கிக் கடன்கள் பெறுதல், பெற்ற கடன்களை மீளளித்தல் மற்றும் அடமானமான சொத்துக்களை மீட்டெடுத்தல் போன்ற சேவைகள் அதன் நுணுக்கங்கள்.
இவற்றினை அறிய அழையுங்கள்
070 6274 847
(2785)

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் லோகநாதன்
சபேஸ்
18.12.2024
மீளாத்துயிலில் நீங்கள் ஆழ்ந்து
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆழ்மனதில் இன்னும்நிழலாய்
நினைவுகளாய்சக்தியாய்
சகலமுமாய்
எம்மோடு என்றும் நீங்கள்....
என்றும் நீங்கா நினைவுடன்...
அப்பா, அம்மா, மனைவி, தங்கை, மச்சான், மருமகன்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
(642)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் விருப்பத்திற்கமைய செயற்படுவது முறையற்றது

## கதறும் சரத்வீரசேகர

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை இந்த நாட்டுக்கு அவசியமா? அவசியமற்றதா? என்பதை இலங்கையர்களே தீர்மானிக்க வேண்டும்.**

இந்தியாவின் விருப்பத்துக்கு அமைய மாகாண சபைத் தேர்தலை நடத்துவது முறையற்றது என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

சமஷ்டி ஆட்சி முறைமையை வலியுறுத்தி தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய அரசமுறை விஜயத்தின் போது கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இலங்கையின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் இருநாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையிலான செயற்திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.'

எதிர்வரும் ஆண்டு இரண்டாம் காலாண்டளவில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரிடம் குறிப்பிட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் இந்தியாவினால் பலவந்தமான முறையில் அமுல்படுத்தப்பட்டது. ஆகவே இந்தியாவின் விருப்பத்துக்கமைய மாகாண சபைத் தேர்தலை நடத்துவது முறையற்றது.

மாகாண சபைத் தேர்தல் குறித்து மக்கள் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பதை அரசாங்கமும் இந்தியாவும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டுக்கும், தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த பணிகளை நிறைவு செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சமஷ்டி முறைமையிலான அரசியலமைப்பு உருவாக்கத்துக்கே நல்லாட்சி அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது. சமஷ்டியாட்சி முறைமை ஒற்றையாட்சி அரசியலமைப்பின் அம்சங்களை இல்லாதொழிக்கும்.

ஆகவே எக்காரணிகளுக்காகவும் சமஷ்டியாட்சி அரசியலமைப்பை உருவாக்குவதற்கு இடமளிக்க மாட்டோம் என அவர் தெரிவித்தார். (நி-8)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## வெற்றி வாகையுடன் விடைபெற்ற டிம் சவுதி



டிம் சவுதி டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

தொடக்க இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை இங்கிலாந்து ஏற்கனவே கைப்பற்றியிருந்த நிலையில், மூன்றாவது போட்டியில் நியூசிலாந்தின் வெற்றியானது அண்மைய ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் தரவரிசையில் நான்காவது இடத்தை பிடிக்க வழியமைத்தது.

தற்சமயம் தரவரிசையில் இங்கிலாந்து ஆறாவது இடத்திலும், நியூஸிலாந்து நான்காவது இடத்திலும் உள்ளன.

தென்னாப்பிரிக்காவுடனான தோல்வியின் பின்னர் இலங்கை ஐந்தாவது இடத்துக்கு சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஹாமில்டனில் நடந்த மூன்றாவது டெஸ்டில் இங்கிலாந்துக்கு எதிராக நியூசிலாந்து 423 ஓட்டங்கள் விததியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியுடன் நியூஸிலாந்தின் மூத்த வேகப்பந்து வீச்சாளர் (6-8)

## கபில்தேவ் சாதனை முறியடித்த பும்ரா



அவுஸ்திரேலியா, இந்தியா இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடந்து வருகிறது. இதில் முதல் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது. முதல் நாள் முடிவில் அவுஸ்திரேலியா 13.2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 28 ரன்கள் எடுத்திருந்தது.

நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. அவுஸ்திரேலியா தொடர்ந்து பட்டிங் செய்தது. இறுதியில் 2 ஆம் நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலியா 7 விக்கெட்டை இழந்து 405 ரன்கள் குவித்தது. டிராவிஸ் ஹெட் 152 ரன்னும், ஸ்டீவ் ஸ்மித் 101 ரன்னும் எடுத்தனர்.

இந்தியா சார்பில் பும்ரா 5 விக்கெட் வீழ்த்தினார்.


இந்நிலையில் இந்தப் போட்டியில் 5 விக்கெட் வீழ்த்திய பும்ரா இந்திய அணியின் முன்னாள் கேப்டன் கபில்தேவ் சாதனையை முறியடித்தார்.

பும்ரா டெஸ்ட் இன்னிங்சில் அவர் 5 விக்கெட் எடுப்பது இது 12ஆவது முறையாகும். அதேசமயம் ஆசியக் கண்டத்துக்கு வெளியே அவர் இன்னிங்சில் 5 விக்கெட் வீழ்த்துவது இது 10ஆவது நிகழ்வாகும். இதற்கு முன் இந்திய பவுலர்களில் கபில்தேவ் ஆசியாவுக்கு வெளியே 9 முறை 5 விக்கெட் எடுத்ததே சாதனையாக இருந்தது. அச்சாதனையை பும்ரா முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3278

### சீதாமதி

நீயெல்லாம் எனக்கு சமமா?
என ஏளனமாய் பார்ப்பவரிடம்...



நான் உனக்கு சமம் அல்ல, கொஞ்சம் மேலே என்று உணர்த்தும்படி ஒரு வாழ்க்கையை வாழ்ந்து விட்டால் போதும்!

### ரீகானா

ஏற்றுக்கொள்ள இயலாத இரண்டு விடயங்கள்
மரியாதை இன்றி நடந்து கொள்ளும் குழந்தைகள்
அதை வேடிக்கையாக எடுத்துக்கொள்ளும் பெற்றோர்கள்




பொது இடத்தில் நன்னடத்தை மிகவும் முக்கியம்

### கீதா

சண்டை போட்டு விட்டு மறுநாள் எதுவும் நடக்காதது போல் பேசும்



அன்பு கிடைத்தால் வாழ்க்கை சொர்க்கமே

### விஜயகுமார்

ஒரு நாளைக்கு எவ்வளவு டீ குடிப்பீங்கள்..
Me: ஒரு கப் தான் குடிப்பேன்
That cup



### பிரவின்

உங்கள் காலடியில கோடிக்கணக்கான பணம் இருக்கும். ஆனால் அதனால் உங்களுக்கு பிரயோசனமில்லை



ஆமாங்க ஐயா bank மாடியில தான் நான் வாடகைக்கு குடியிருக்கேன்

### அஸ்வின்

கோடி ரூபாய் கொடுத்தாலும் சில விடயங்கள் செய்ய மாட்டேன்



அதில் ஒன்று குளிர்காலத்தில குளிக்கிறது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(C-013)


# முறிந்து விழுந்த மரம்



(வவுனியா)

வவுனியா புகையிரத நிலையம் முன்பாக நின்ற பழைமையான மரம் காற்றின் காரணமாக முறிந்து விழுந்ததில் அரச விடுதி, வர்த்தக நிலையம் என்பன சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் மதியம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (நி-8-250)



முல்லைத்தீவு மாவட்ட கலாசார பேரவையின் ஏற்பாட்டில் முல்லைப் பொன் புத்திசிகாமணி எழுதிய "நான் பார்த்த நந்திக்கடல்" நூல் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-சதீஸ்)

# புதிய சபாநாயகர் பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

10 ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக பொலநறுவை மாவட்ட எம்.பி ஜகத் விக்கிரமரத்ன பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வு பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தலைமையில் ஆரம்பமாகியது.

புதிய சபாநாயகராக ஜகத் விக்ரமரத்னவின் பெயரை பிரதமர் ஹரிணி அமரசூரிய முன்மொழிந்துள்ள நிலையில் பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக ஜகத் விக்ரமரத்ன பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் என்.எஸ்.குமாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி அசோக ரன்வல டிசம்பர் 13ஆம் திகதி முதல் தனது பதவியை பதவி விலகல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)




## மனோ உட்பட
# புதிய எம்.பிக்கள் பதவிப்பிரமாணம்



(கொழும்பு)

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதி சபாநாயகர் முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

பைசர் முஸ்தபா, சுஜீவ சேனசிங்க, மனோ கணேசன், நிஸாம் காரியப்பர், இஸ்மாயில் மொஹம்மட், முத்து மொஹம்மட் ஆகியோர் இவ்வாறு பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். (நி-8)



இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவை வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அண்மையில் கடற்படைத் தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந் நிகழ்வின் போது கடற்படைத் தளபதியினால் வட மாகாண ஆளுநருக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-சிவசாந்தன்)



**ஜெனிவா சமவாயங்களின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுவிஸ்லாந்து தூதரகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த கலந்துரையாடல் நிகழ்வும் கண்காட்சியும் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.**

# புளியின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் புளியின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோ கிராம் எடையுடைய புளியின் மொத்த விற்பனை விலை ஆயிரம் ரூபா வரையில் அதிகரித்துள்ளதாக வர்த்தக நிலையத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலர் வலயங்களில் புளி விளைச்சல் காணப்படும் நிலையிலும் புளியின் மொத்த விலை உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மொத்த விலை அதிகரிப்புக் காரணமாக 100 கிராம் எடையுடைய புளியின் சில்லறை விலை 150 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ கிராம் புளியின் சில்லறை விலை 1500 ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தைக்கு போதியளவு புளி கிடைக்கப் பெறாத காரணத்தினால் இவ்வாறு விலை அதிகரிப்பு பதிவாகி உள்ளதாக வர்த்தக மத்திய நிலைய வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகரசபையை முற்றுகையிட்டு போராட்டம்

## இருவர் கைதாகி பிணையில் விடுவிப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்கும் விவகாரத்தில் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாமையால் பாதிக்கப்பட்ட தரப்பினர் நேற்று சாவகச்சேரி நகரசபையை முற்றுகையிட்டு போராடியிருந்த நிலையில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அண்மையில் சாவகச்சேரி நகரசபை புதிய கடைத் தொகுதிகளை அமைத்து அதனை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வியும் கோரியிருந்தது.

இதன்போது கடந்த 2000 ஆம் ஆண்டு காலத்திற்கு முன்பாக சாவகச்சேரியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு யுத்தம் காரணமாக கடைகளை இழந்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனக் கோரிய போதிலும் நகரசபையானது முழு இலங்கைப் பிரஜைகளும் கடைகளைப் பெற விண்ணப்பிக்க முடியும் என கேள்வி கோரியமையால் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத் தவர்கள் நகரசபைக் கதவினை அடைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன்போது சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களால் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு முறையிடப்பட்டுள்ள நிலையில் கேள்விப் படிவங்கள் திறக்கும் தினத்தை தற்காலிகமாக நிறுத்தி கேள்விப் பத்திரங்களை உறை நிலையில் வைத்திருக்குமாறு நகரசபைச் செயலாளருக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து பாதிக்கப்பட்ட மக்களுடைய போராட்டமும் தற்காலிகமாக நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி போராட்டத்திற்கு சாவகச்சேரி வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரும் வலுச்சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-30-33)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பிரதேச பண்பாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு, கலாசார அலுவல்கள் திணைக்களம், பிரதேச கலாசார பேரவை, கலாசார அதிகார சபை மற்றும் பிரதேச கலைஞர்களின் நிதிப் பங்களிப்புடன் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம் நடத்தும் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு சுதுமலை அம்மன் கோவில் முன்பாக அமைந்துள்ள "குபேர மஹால்" மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி.சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப் பணிப்பாளர் திருமதி. லாகினி நிருபராஷ், கௌரவ விருந்தினர்களாக நவாலி ஆயுள்வேத வைத்தியர் புஸ்பராணிலியோன், யாழ்.மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி.சுகுணாலினி விஜயரத்தினம், பண்டத்தரிப்பு சிற்பாச்சாரியார் கலாபூஷணம் சின்னத்தம்பி கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வதுடன் நூல் நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. திருச்செல்வம் செல்வமனோகரன் வழங்கவுள்ளார். (நி-6-8)

## ஆளணிப் பற்றாக்குறை; மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள்

### நோயாளர்கள் சிரமம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறை காரணமாக சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் பிரசவ விடுதி ஆகியவற்றின் செயற்பாடுகளை தற்போது மட்டுப்படுத்தியிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கான வைத்திய அதிகாரி இன்மையால் பாரிய மற்றும் நடுத்தர அளவிலான சத்திரசிகிச்சைகள் மற்றும் குழந்தைப் பிரசவம் ஆகிய மருத்துவ சேவைகள் இரண்டு வார காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் சத்திர சிகிச்சைக் கூடம் இயங்கி வருவதாகவும் சிறிய அளவிலான சத்திரசிகிச்சைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த 27.09.2024 அன்று முதற் தடவையாக சத்திர சிகிச்சைக் கூடம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை 38 பிரசவங்களும் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் ஆளணிப் பற்றாக்குறையால் சத்திர சிகிச்சைக் கூடத்தின் செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் பிரசவம் மற்றும் சத்திரசிகிச்சை உள்ளிட்ட வைத்தியத் தேவைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டிய தேவை மீண்டும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

## இராசிபலன்

18.12.2024
மார்கழி 03, புதன்கிழமை
திருதியை பிற்பகல் 12.53 மணிவரை
பூசம் பின்னிரவு 4.07 மணிவரை

சுபநேரம் -4.53-6.23 மணிவரை
இராகுகாலம் 12.23-1.53 மணிவரை
சாங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்- கேட்டை

வளவன்




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு, உடல் நலன் சீராகும், கற்பனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்களில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், நினைத்த காரியங்கள் நிறைவேறும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், வழிபாடு குதூகலம் தரும், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், உடல் நலனில் கவனம் தேவை, பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.




சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்கள் கைகூடும்.




குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், நம்பிக்கைகள் நடைபெறும் தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள்.




நிலையான வருமானத்திற்கு வழியமைத் துக்கொள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி. அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.




விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சகோதர வழியில் இனிய சம்பவங்கள் நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வழியில் இன்பங் கள் கூடும் நாள்.




காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், சிந்தித்துச் செயற்பட வேண்டிய




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

அன்புள்ள இதயம் என்றும் இளமையாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.போதனா வைத்தியசாலை விவகாரம்

# பேச முற்பட்ட அர்ச்சுனா இடைமறித்த சபாநாயகர்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா யாழ். போதனா வைத்தியசாலை விவகாரம் தொடர்பாக பேசுவதற்கு நேற்று சபை அமர்வின் போது அனுமதி தருமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் கோரிக்கையை நிராகாரித்து அவர் பேச முற்பட்ட போது இடைமறித்தார்.

இங்கு உரையாற்றிய அர்ச்சுனா, "உறுப்புரை பிரிவு 19 இன் படி யாழ்.போதனா வைத்தியசாலை விவகாரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விடயம் ஆகும்.

இரு சில தினங்களுக்கு முன்பு முன்னாள் சுகாதார அமைச்சருடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தேன். இன்று (நேற்று) 17 ஆம் திகதி) காலை எழுத்தின் மூலம் சமர்ப்பித்திருந்தேன்" என தெரிவித்தார்.

இந்த நிலையில் குறுக்கிட்ட அமைச்சர் "இது ஒழுங்குப் பிரச்சினை இல்லை, வேறு விடயமாக இதைப் பற்றிப் பேசலாம்" என தெரிவித்தார்.

இதேவேளை "இது ஒழுங்குப் பிரச்சினையுடன் தொடர்புடையது அல்ல" என சபாநாயகர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஐ.ம.ச விலிருந்து விலகினார் ஜகத்குமார

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார அந்தக் கட்சியிலிருந்து விலகியுள்ளார்.



கொழும்பில் ஊடக சந்திப்பொன்றை நடத்தித் தமது தீர்மானத்தினை அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அண்மையில் கட்சியில் இணைந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு நீதி வழங்காமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து தாம் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பட்டியல் உறுப்பினர் தெரிவின்போது, கடந்த தேர்தலில் எதிர்க்கட்சியினால் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இணைத்துக்கொள்ளப்படவில்லை.

அவர்களுக்குத் தேவையானவர்களை மாத்திரம் தெரிவுசெய்வதற்கு முயற்சிக்கின்றமை இதன்மூலம் தெளிவாகின்றது.

அவ்வாறானதொரு கட்சியிலிருந்து நாட்டுக்கும் பொது மக்களுக்கும் தொடர்ந்து சேவையாற்ற முடியாது.

பொதுத் தேர்தல் நிறைவடைந்து கடந்த ஒருமாத காலமாக அவர்கள் முன்னெடுக்கும் விடயங்களை அவதானித்துக் கொண்டிருந்தேன்.

குறைந்தபட்சம் மனிதாபிமானத்துடன் செயற்படுவதைக் கூட அவதானிக்க முடியவில்லை.

ஆகவே, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி எதிர்வரும் காலங்களில் தாம் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார். (நி-8)

# 10-20 சதவீதம் வரை மின்கட்டணத்தை குறைக்க வாய்ப்பு

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை 10 முதல் 20 சதவீதம் வரை குறைக்க வாய்ப்பு உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தை குறைக்க முடியாது என மின்சார சபை முன்வைத்துள்ள யோசனைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விளக்கமளித்துள்ளது. உத்தேச மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பான பொது மக்களின் கருத்துக்களை சேகரிக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன

அதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரை பொதுமக்கள் தங்களது ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆண்டுக்கு நான்கு முறை மின் கட்டணத்தை திருத்தும் கொள்கையின் படி, இந்த ஆண்டு இரண்டு முறை மின் கட்டணம் திருத்தப்பட்டது.

இலங்கை மின்சார சபையானது இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள மூன்றாவது மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்கான முன்மொழிவுகளை கடந்த ஒக்டோபர் மாத இறுதியில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

இலங்கை மின்சார சபையானது மின்சார கட்டணத்தை 6 சதவீதம் முதல் 11 சதவீதம் வரை குறைப்பதற்கு முன்மொழிந்திருந்த போதிலும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதனை ஏற்றுக்கொள்ள வில்லை.

பிரேரணையின் அடிப்படையிலான முறைமை தொடர்பில் பல பிழைகள் காணப்படுவதாகவும் தற்போதைய நிலவரத்தை பொறுத்து மின்சார கட்டணத்தை அதிக சதவீதத்தினால் குறைக்க முடியும் எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை மின்சார சபையின் புதிய மின்சாரக் கட்டண திருத்தப் பிரேரணை கடந்த 6 ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், முன்னர் கூறப்பட்டிருந்த மின்சாரக் கட்டணக் குறைப்பு அந்தப் பிரேரணையில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள மின்கட்டணத்தை திருத்தம் செய்யாமல் அடுத்த 6 மாதங்களுக்கு தொடர வேண்டும் என மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையில் 10 முதல் 20 சதவீதம் வரை மின்சாரக் கட்டணத்தை குறைக்க வாய்ப்பு இருப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)


## சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட, சபைக்கு சொந்தமான கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் 18.12.2024 ஆம் திகதி மு.ப 11:00 மணிக்கு திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் NP/14/41(1)/04/Gen03/01/2024 இலக்க 17.12.2024 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் குறித்த கேள்வி திறத்தல் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

குறிப்பு - விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொண்டவர்கள் 18.12.2024 ஆம் திகதி மு.ப. 11:00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும்.

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி. (கி-1843)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15020 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L Mid wife.<br>எதிர்பார்ப்பு: A/L, உத்தியோகம்<br>தொ.இ: G/15019 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 29<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: O/L, Shop (Own)<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15024 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 34 1/2<br>தகைமை/தொழில் : BBA, Accountant (AGA,UK Company)<br>எதிர்பார்ப் பு : படித்த தகுதியான ஆண்<br>தொ.இ: G/15021 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 36<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc Teacher (Maths)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15026 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, Temporary Demonstrator Jaffna University.<br>எதிர்பார்ப்பு : Degree<br>தொ.இ: G/15022 |

கல்யாணமாலை
இல. 144, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## புத்தகாயாவிற்கு சென்று வழிபட்ட ஜனாதிபதி அநுர



(டில்லி)

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுக் காலை பீகாரில் அமைந்துள்ள புகழ்பெற்ற புத்தகாயாவின் மகாபோதி ஆலயத்துக்கு சென்றுள்ளார்.

பீகாரைச் சென்றடைந்த ஜனாதிபதியை, கயா விமான நிலையத்தில் வைத்து மூத்த அரசு அதிகாரிகள்வர வேற்றனர்.




அத்துடன், புத்தகாயாவின் மகாபோதி ஆலய வளாகத்திற்குள் சென்ற ஜனாதிபதி அநுரவை பௌத்த பிக்குகள் அன்புடன் வரவேற்றனர்.

யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமாகவும் விளங்கும் மகாபோதி கோயில், புத்த மதத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

புத்தர் ஞானம் பெற்றதாகக் கூறப்படும் இடத்தைக் குறிக்கும் வகையில், புத்தகாயாவில் உள்ள ஒரு பழங்கால புத்த கோவில் இதுவாகும். (நி-8)

## விருப்பு நாடுகளில் இருந்து இந்தியாவை நீக்கிய சுவிஸ்



(பேர்ன்)

சுவிஸர்லாந்து நாட்டின் விருப்பு நாடுகளின் பட்டியலில் இருந்து இந்தியாவை நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு 2025 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்ப காலங்களில் இந்தியாவுக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையிலான வர்த்தக உறவு சிறப்பாகக் காணப்பட்ட போதிலும் தற்போது அந்த உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஆரம்ப காலத்தில் சுவிஸர்லாந்தின் விருப்பப்பட்டியலில் இருந்த இந்தியா தற்போது நீக்கப்பட்டுள்ளது.

சுவிஸர்லாந்தின் சட்டத்தின் படி விருப்பப்பட்டியலில் உள்ள நாடுகளின் நிறுவனங்களுக்கு 5% வரியும், அப் பட்டியலில் இடம்பிடிக்காத நாடுகளின் நிறுவனங்களுக்கு 10% வரியும் அறவிடப்படுகின்றது. இந்நிலையில் குறித்த விருப்பப் பட்டியலில் இருந்து தற்போது இந்தியா நீக்கப்பட்டுள்ளதால் இந்திய நிறுவனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## பாரம்பரிய உடையில் மாரத்தன் ஓடிய தமிழக தம்பதி





(அபுதாபி)

மாரத்தன் ஓட்டம் என்றாலே ரீசேர்ட் - காற்சட்டை அணிந்து ஓடுவது வழக்கம். தமிழகத்தின் பாரம்பரிய உடையான வேட்டி-சட்டை மற்றும் பாவாடை-தாவணி அணிந்து ஓடி தமிழகத்தைச் சேர்ந்த தம்பதியினா் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தனர்.


அபுதாபியில் தேசிய எண்ணெய் நிறுவனத்தின் சார்பில் மாரத்தன் தொடர் ஓட்ட போட்டி, கிங் அப்துல்அஜீஸ் அல் சவுத்சாலையில் உள்ள அந்த நிறு வனத்தின் தலைமை யகத்தில் தொடங்கியது. இதில் பல்வேறு நாடு களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். பல பிரிவுகளில் நடந்த இந்த நீண்ட தொலைவு ஓட்டப் போட்டியில் அமீரகத்தில் வசிக்கும் தமிழகத்தின் நாகர் கோவிலைச் சேர்ந்த லிடியா ஸ்டாலின் மற்றும் விபின் தாஸ் தம்பதியினர் கலந்து கொண்டு உற்சாகமாக ஓடினர்.

மாரத்தன் ஓட்டம் என்றாலே ரீசேர்ட் - காற்சட்டை அணிந்து ஓடுவது வழக்கம். ஆனால் இவர்கள் வழக்கமான தடகள வீரர்கள் அணியும் உடைகளை தவிர்த்து தமிழகத்தின் பாரம்பரிய உடையான வேட்டி-சட்டை மற்றும் பாவாடை-தாவணி அணிந்து ஓடி பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தனர்.

மொத்தம் 42.2 கிலோ மீற்றர் தொலைவை பாரம்பரிய உடை அணிந்து 4 மணி நேரத்தில் நிறைவு செய்து சாதனை புரிந்தனர். முடிவில் நிறுவனத்தின் சார்பில் தம்பதியினருக்கு பதக்கம் மற்றும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. (நி-8)

## விஷவாயு தாக்கி 11 இந்தியர்கள் பலி

### ஜோர்ஜியாவில் பயங்கரம்




ஜோர்ஜியாவின் குடாரியில் உள்ள ஒரு உணவகத்தில் கார்பன் மோனாக்சைடு விஷம் பரவியதில் 11 இந்தியர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்கள் அனைவரும் உணவகத்தில் பணிபுரிந்தவர்கள் என முதற்கட்ட விசாரணையில் தகவல் தெரியவந்ததை அடுத்து, ஜோர்ஜிய அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கியுள்ளனர். ஆனால் இந்த சம்பவத்தில் வன்முறைக்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்பதையும் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

இறந்தவர்கள் அனைவரும் கார்பன் மோனாக்சைடு விஷத்தால் இறந்துள்ளனர். பாதிக்கப்பட்ட 12 பேரும் பணிபுரிந்த இந்திய உணவகத்தின் இரண்டாவது மாடியில் ஓய்வெடுக்கும் பகுதியில் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுகுறித்து திபிலிசியில் உள்ள இந்தியத் தூதரகம், "ஜோர்ஜியாவின் குடாரியில் துரதிர்ஷ்டவசமாக பதினொரு இந்தியர்கள் உயிரிழந்திருப்பதை அறிந்து வருத்தமடைகிறது. மேலும் அவர்களது குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது" என குறிப்பிட்டிருந்தது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# “நிலநடுக்க வெடிகுண்டுகளை” சிரியா மீது வீசிய இஸ்ரேல்!

## வைரலாகும் அதிர்ச்சி வீடியோ



**(டமாஸ்கஸ்)**

**சிரியா மீது இஸ்ரேல் நிலநடுக்க வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலின்போது சிரியாவில் ரிக்டர் அளவுகோலில் 3.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

குண்டுவெடிப்பு தொடர்பான வீடியோ இணையத்தில் வெளியாகிப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்தின் படைகளுக்கு எதிராக நீண்ட காலமாக ஆயுத மோதலில் ஈடுபட்டு வந்த கிளர்ச்சிக் குழுவினர் நாட்டின் பெரும்பகுதிகளை கைப்பற்றி உள்ளனர்.

இதையடுத்து ஆசாத் குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. ஜனாதிபதி ஆசாத் பாதுகாப்பு கருதி நாட்டைவிட்டு வெளியேறி ரஷ்யாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இதனால் சிரியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஆசாத் நாட்டை விட்டுச் சென்ற பிறகு அவரது ஆட்சியில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் மற்றும் பெரும்பாலான உயர் அதிகாரிகளும் வெளியேறிவிட்டனர். அதேசமயம், பிரதமர் முகமது காஜி ஜலாலி தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார்.

நாட்டில் அமைதியை நிலைநாட்டு வதற்காகவும் புதிய தலைமையை கொண்டு வருவதற்காகவும் கிளர்ச்சிக் குழுவினருக்கு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## அமெரிக்காவின் பாடசாலையில் துப்பாக்கி சூடு

### இருவர் உயிரிழப்பு, 6 பேர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் விஸ்கான்சின் மாநிலத்தில் அமைந்துள்ள தனியார் கிறிஸ்தவப் பாடசாலையில் மாணவர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.



இந்த துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் காயமடைந்தனர். ஆசிரியர் ஒருவரும் பதின்ம வயது மாணவர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் 15 வயதையுடைய மாணவர் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இரவு துப்பாக்கி சூட்டினை நடத்தியதாக விஸ்கான்சின், மேடிசன் நகர பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

தாக்குதல் நடத்தியவர் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்பு சம்பவம் நடைபெற்ற அபண்டன்ட் லைஃப் கிறிஸ்டியன் பாடசாலையில் இருந்ததாகவும் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்ததாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணத்தை பொலிஸார் இன்னும் கண்டறியவில்லை. சந்தேக நபரின் குடும்பத்தினர் விசாரணைக்கு ஒத்துழைத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (நி-8)

## திடீரென பதவி விலகிய கனடாவின் துணைப் பிரதமர்

(ஒட்டாவா)

கனடாவின் துணைப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீ லேண்ட் தனது பதவியை விட்டு விலகியுள்ளார்.

கனடாவின் நிதியமைச்சரும், துணைப் பிரதமருமான கிறிஸ்டியா ஃப்ரீ லேண்ட் வருடாந்திர அரசு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக பதவி விலகியுள்ளதாக கூறப்படுகிறது.

குறித்த விடயத்தை அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கடிதம் மூலம் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த கடிதத்தில் கனடாவின் வளர்ச்சிப் பாதையில் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, ஜஸ்டின் ட்ரூடோ தனது அரசில் உயர்நிலை பொருளாதார ஆலோசகராக இருப்பதில் தனக்கு விருப்பம் இல்லை என்று கடந்த வாரம் தெரிவித்திருந்ததோடு தனது பதவியை விட்டு விலகுவதாகவும் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



## ரஷ்ய துருப்புக்களை தவறுதலாக சுட்டுக் கொன்ற வடகொரிய வீரர்கள்

(மொஸ்கோ)

உக்ரைனின் இராணுவ புலனாய்வு அமைப்பின் கூற்றுப்படி, வட கொரிய சிறப்புப் படை வீரர்கள் தவறுதலாக எட்டு ரஷ்ய துருப்புக்களைக் கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடகொரிய வீரர்கள் உக்ரைன் வீரர்கள் என தவறுதலாக கருதி ரஷ்ய வீரர்களை சுட்டுக் கொன்றதாக கூறப்படுகிறது.

ரஷ்யப் படைகளுக்கும் கிரெம்ளின் துருப்புக்களுக்கு உதவுவதற்காகக் கொண்டுவரப்பட்ட 12,000 வரையிலான வட கொரியப் படையினருக்கும் இடையே உள்ள மொழித் தடை ஒரு முக்கிய பிரச்சினையாக பார்க்கப்படுகிறது.


இந்த மொழிப் பிரச்சினை காரணமாக ரஷ்ய வீரர்களை தவறுதலாக சுட்டுக்கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் ஜனாதிபதிகளின்

# இராணுவ பாதுகாப்பு அடுத்த வாரம் முதல் நீக்கம்

சபையில் அறிவித்தார் அமைச்சர்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பொலிஸாரின் பாதுகாப்புத்தவிர்ந்த அனைத்து ஆயுதப்படைகளின் பாதுகாப்பும் எதிர்வரும் வாரத்தில் இருந்து நீக்கப்படவுள்ளதாக பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு மதிப்பீட்டின் பின்னர் உரிய பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கென ஏனைய கடமைகளில் ஈடுபட்டுள்ள சில அதிகாரிகளும் நீக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது நடைமுறைப்படுத்தப்பட்டால் அரசாங்கம் இதுவரை செலவிட்ட பணத்தில் சுமார் 1200 மில்லியன் ரூபாயை சேமிக்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 800 | 700 | 500 | 650-700 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 280 | 270 | 250 | 300 |
| பச்சைமிளகாய் | 1500 | 1000 | 1200 | 1000-1300 | 900 |
| தக்காளி | 500 | 500 | 500 | 250 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 180 | 240 | 150-180 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 260 | 400 |
| கரட் | 250 | 280 | 300 | 250 | 300 |
| பூசணி | 200 | 180 | 150 | 160 | 250 |
| புடோல் | 350 | 350 | 300 | 300 | 400 |
| வாழைக்காய் | 120 | 180 | 100 | 80-100 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 350 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 300 | 250 | 360 | 300 |
| பாகற்காய் | 1800 | 1600 | 2000 | 2000 | 2000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 800 | 800 | 400 | 600-700 | 800 |
| லீக்ஸ் | 400 | 400 | 300 | 300 | 500 |
| பீற்றூட் | 350 | 400 | 400 | 250 | 400 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | 800 | 2000 | -- | 1600 |
| போஞ்சி | 600 | 500 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 700 | 600 | 400 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 150 | 180 | 250 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 300-450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 170 | 200 | 200 | 90-150 | 160-200 |
| இராசவள்ளி | -- | 800 | 600 | 600 | 1500 |
| வெங்காயப்பூ | -- | 800 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 220 | 300 | 200 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 90 | 120 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 80 | 200 |

# இன்று ஒரு தகவல் 286



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மாணவர் பெருமை!

ஒரு பெரிய காடு. அந்தக் காட்டுக்கு மத்தியில் ஒரு ஆச்சிரமம். அங்கே ஒரு முனிவர் இருந்தார். பல இடங்களிலேயிருந்து வரும் குழந்தைகளுக்கு அவர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஏழை- பணக்காரர் என்னும் வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் அவரிடம் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைத்தார்கள். மன்னர்களுடைய பிள்ளைகளைக் கூட அவரிடம் தான் படிக்க வருவார்கள். ஆனால் அந்த முனிவரைப் பொறுத்த வரைக்கும் எல்லா பிள்ளைகளும் ஒன்று தான். இது யார் வீட்டுப் பிள்ளை என்று எல்லாம் பார்க்க மாட்டார். எல்லோரும் சமம்.

மாணவர்கள் எல்லோரும் அங்கேயே மாதக் கணக்கிலே-வருடக் கணக்கிலே தங்கியிருந்து பாடம் கற்றுக் கொண்டு போவார்கள்.

அவராக பார்த்து போ என்று சொல்கிற வரைக்கும் அங்கேயே இருக்க வேண்டும்.படிக்க வேண்டும்.

ஒரு சமயம் ஒரு ராஜகுமாரனும் அவரிடம் வந்து படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு 15 வயது இருக்கும். சில வருடம் கழித்து அந்த முனிவர் தன்னிடம் இருக்கிற மாணவர்களுக்கெல்லாம் பரீட்சை வைத்தார். அவர்களுடைய அறிவு முதிர்ச்சியை கணிக்கிறதற்கு பல சோதனைகள் வைத்தார்.ஒவ்வொருத்தராகப் பார்த்து இனிமேல் நீ உங்களுடைய வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லி அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்.

எல்லோரும் போய்விட்டார்கள். கடைசியாக மிஞ்சியிருந்தது ஒரே ஒரு மாணவன். அவனை மட்டும் வீட்டுக்கு அனுப்பவில்லை. யார் அந்த பையன் தெரியுமா? ராஜகுமாரன் தான்.அந்த ராஜகுமாரனுடைய தந்தைக்கு அங்கே வயது ஏறிக் கொண்டே போனது என்ன இது.., படிக்கப் போன பையன் இன்னும் திரும்பி வரவில்லையே என்று நினைத்தார்.

வந்துவிட்டால் சீக்கிரம் அவனுக்குப் பட்டம் கட்டிவிட்டு தான் விலகிக் கொள்ளலாம் என்று நினைத்தார். கல்யாணம் வேறு செய்து வைக்க வேண்டும்.

ஆனால் பையன் வருகிற வழியைக் காணவில்லை.ராஜா பார்த்தார். சரி நேரிலேயே போய் என்ன என்று தெரிந்து கொண்டு வரலாம் என்று காட்டுக்குப் புறப்பட்டார்.

அங்கே போய் முனிவரைப் பார்த்தார் முனிவர் இவரை அன்பாக வரவேற்றார். ராஜா மெதுவாக எல்லோரையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டீர்களாம். என் பிள்ளையை மட்டும் என்று இழுத்தார். முனிவர் இதற்கு உடனே பதில் சொல்லவில்லை.

ராஜாவை விருந்தினர்குடிசையில் தங்க வைத்தார். பின் சொன்னார்.உங்கள் மகன் எல்லாப் பாடங்களிலும் முதலிடம் பெற்றதால் நாங்கள் இன்னொரு தேர்வு வைப்பது வழக்கம். அதிலும் முதலாவதாக வந்தால் அவன் ஒரு பெரிய வித்துவான் என்றும் கௌரவத்தை அடைவான் என்றுவிட்டு முனிவர் போய்விட்டார்.ராஜா அங்கேயே இரவு தங்கினார். காலையில் எழுந்து அந்த குடிசைக்கு வெளியே வந்தார். பல் துலக்குவதற்கு.அந் நேரம் தூரத்தில் ஒருவன் ஒரு கையில் கோடரி வைத்துக்கொண்டு தலையில் ஒரு பெரிய விறகுக் கட்டையை சுமந்துகொண்டு வந்து கொண்டிருக்கிறது தெரிந்தது.

யாராவது விறகு வெட்டியாக இருக்கும் என்று நினைத்தார். ராஜாவிடம் வந்ததும் உற்றுப் பார்த்தார். பார்த்தால் அது தன்னுடைய பிள்ளை திகைத்துப் போய்விட்டார். என்ன இது ஒரு ராஜகுமாரனைக் கூட இது மாதிரி வேலையெல்லாம் செய்யச் சொல்கிறார்களே என்று நினைத்தார். ராஜகுமாரன் விறகுக் கட்டை கொண்டு வந்து போய் கொல்லைப்பக்கம் வைத்தார். அந்நேரம் முனிவர் வந்தார்.என்ன மகனே விறகுவெட்டிவிட்டு வந்துவிட்டாயா? சரி இப்பொழுது ஒரு துடைப்பத்தை எடுத்து விருந்தினர் குடிசை வாசல் பக்கத்தை கூட்டிப் பெருக்கி சுத்தம் செய். அப்படியே செய்கிறேன் குருவே என்று சொல்லிவிட்டுப் போனான். சுத்தம் செய்தான்.

ராஜா பார்த்துவிட்டு மகனே துடைப்பத்தை கீழே போடு என்றார். இப்பொழுது ராஜகுமாரன் தந்தையே இது என்னுடைய குருதேவரின் உத்தரவு. இங்கு நான் ஒரு மாணவன் இங்கு அரசனும் ஆண்டியும் ஒன்று தான். குருதேவர் சொல்வதை செய்வது என் கடமை என்றான்.

முனிவர் வந்தார் இவனை முதுகில் தட்டிக் கொடுத்தார்.பின்பு ராஜாவிடம் சொன்னார்.

அரசே உங்கள் பிள்ளை எங்கள் இறுதி தேர்விலும் வெற்றி பெற்றுவிட்டார். பணிவு தான் மாணவர்களின் மிக உயர்ந்த குணம்.குருநாதர் சொல்வது மனதுக்குப் பிடிக்கவில்லை என்றால் கூட மறுக்காமல் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் எதைச் செய்யலாம். எதைச் செய்யக் கூடாது என்கிற விவேகம் அவர்களுக்கு வந்துவிடும்.

செய்யக்கூடாததைக் கூட பெரியவர்கள் சொல்லிவிட்டால் செய்து தான் ஆகவேண்டும் பணிவு அவர்களுக்கு வந்துவிடும்.அவர்கள் கடினமாக வேலைகளையும் சுலபமாகச் செய்து முடிப்பர்.துக்கத்திலும் துவண்டுவிடமாட்டார்கள்.இந்தப் பணிவும் விவேகமும் அவர்களிடம் மன உறுதியை ஏற்படுத்தும். அந்த உறுதி உங்க பையனுக்கு வந்து விட்டது. இனிமேல் அவனை நீங்கள் அழைத்துக் கொண்டு போகலாம். அவன் நிச்சயமாக பேரும் புகழும் பெறுவான். அப்படி என்றார். குருதேவர். ராஜா அவரைப் பார்த்து குருதேவா புரிந்து கொண்டேன். என்னை மன்னிக்கவேண்டும் என்றார். அதற்குப்பிறகு மகனை அழைத்துக் கொண்டு நாட்டுக்குத் திரும்பினார்.


இக் கதையை இன்று ஓர் தகவலில் சொல்லுங்கள் என்றார் ஒருவர். அதற்கு முதல் ஒருவனிடம் சொல்வோம் என்று கூறி ஒரு பையனைக் கூப்பிட்டோம்.

ஏன் உங்களுடைய குரு உனக்கு இது மாதிரி ஒரு பரீட்சை வைத்தால் என்ன செய்வார் என்று கேட்டோம். நானும் அப்படி தான் சேர் நடந்து கொள்வேன். விறகு வெட்டுவேன். துடைப்பத்தாலே கூட்டி சுத்தம் செய்வேன் உடனே செய்து முடித்துவிடுவேன் என்றான். பரவாயில்லையே என்றேன். ஆமாம். சேர் செய்தால் தானே வீட்டுக்கு அனுப்புவார். இல்லை என்றால் இன்னொரு வருடம் இங்கேயே இருந்து படி என்று சொல்லி விடுவாரே அப்படி என்றான் அந்தப் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற தானியங்கள் விற்பனை செய்த நிறுவனத்திற்கு சீல்

## பச்சைப்பயறு, திரவப்பசளை மீட்பு



(வவுனியா)

விவசாய உற்பத்திகள் மற்றும் உள்ளீடுகளை விற்பனை செய்துவரும் தனியார் நிறுவனம் ஒன்று நுகர்வோர் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் நேற்று சீல்வைக்கப்பட்டது.

குறித்த நிறுவனத்தில் தரமற்ற தானியங்கள் உள்ளதாக இராணுவ புனாய்வு பிரிவினரால் வவுனியா மாவட்ட நுகர்வோர் அதிகாரசபைக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று காலை வவுனியா ஈரற் பெரியகுளம் பகுதியில் உள்ள குறித்த நிறுவனம் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டது.

இதன்போது தரமற்ற வகையில் காணப்பட்ட பச்சைப்பயறு ஒரு தொகை மீட்கப்பட்டதுடன் இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த திரவப் பசளை ஒரு தொகுதி கண்டு பிடிக்கப்பட்டது.


அவற்றின் தரம் தொடர்பாக ஆராய்வதற்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன், பரிசோதனைகள் முடிவடையும் வரை அவற்றை விற்பனை செய்ய வேண்டாம் என்று அதிகாரிகளால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன், அவ் நிறுவனம் சீல்வைத்து மூடப்பட்டது.

குறித்த நடவடிக்கையின் போது மாவட்ட அரச அதிபர் பி.எ.சரதசந்திர, மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், உரச் செயலகத்தின் பிரதிப்பணிப்பாளர் பந்துல விஜயவர்த்தன உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் சமூகமளித்திருந்தனர்.

இதேவேளை இன்று குறித்த களஞ்சியத்தை சுகாதார பரிசோதகர்களும் பார்வையிட்டு ஆய்வு செய்யவுள்ளனர். (6-8)

# யானையை மோதிய கூலர்





(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் - மன்னார் வீதியில் உள்ள பெரியகட்டுப் பகுதியில் மன்னாரில் இருந்து மதவாச்சி நோக்கி மீன்களை ஏற்றி வந்த கூலர் ரக வாகனமும் யானை ஒன்றும் விபத்துக்குள்ளானது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் கூலர் வாகனம் கடுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த யானை வீதியோரத்தில் உள்ள நீர் உள்ள குழி ஒன்றில் விழுந்து கிடந்து உயிருக்குப் போராடிய நிலையில் அவதானித்த மக்கள் சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு வருகை தந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் யானைக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. மேலும் விபத்து தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8-250)

# தாய், சிசு மரணம் தொடர்பிலான வழக்கு ஜனவரி 20ஆம் திகதி தவணை

(மன்னார்)

மன்னார் பொது வைத்தியசாலையில் மகப்பேற்று சிகிச்சையின் போது உயிரிழந்த தாய் மற்றும் சிசுவின் மரணம் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் மரண விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது

இதன் போது உயிரிழந்த பெண்ணின் கணவரிடம் மரணம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டதுடன் அவருடைய சாட்சியம் பதிவு செய்யப்பட்டு அவற்றை நெறிப்படுத்தப்பட்டது.

அதே நேரம் சம்பவத்தின் போது கடமையில் இருந்த இரு தாதிய உத்தியோகத்தர்களையும் விசாரித்து அவர்களின் சாட்சியங்களையும் நெறிப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பெண்ணின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறாமையினால் குறித்த அறிக்கையை விரைந்து பெறுவதற்கான நினைவூட்டல் கடிதத்தை அனுப்பி உடற்கூற்று பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்ளுமாறு உயிரிழந்த தாயின் சார்பாக ஆஜரான சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை மேலதிக நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதம் 20 ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது. (6-8-285)

# நெற்பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் காட்டு யானைகள்

## விவசாயிகள் கவலை



(தரும்புரம்)

கிளிநொச்சியில் இரவு வேளைகளில் யானைகள் நெற்செய்கையை அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்மடு குளத்தின் கீழ் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் இவ்வாறு கவலை தெரிவிக்கின்றனர்.

70 நாட்கள் கடந்த நிலையில் உள்ள நெற் பயிர்களை இரவு வேளைகளில் காட்டு யானைகள் மேய்ந்து வருவதாகவும் ஒவ்வொரு வருடமும் இந்தக் காலப்பகுதியில் இரவு பகலாக காவல் காக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இதன் காரணமாக ஒவ்வொரு வருடமும் நெற்செய்கையில் பெரும் நட்டத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது பகுதிக்கு வருகை தந்து நேரடியாக பார்வையிட்டு எமக்கான நிரந்தர தீர்வு ஒன்றினை பெற்றுத் தர வேண்டுமென விவ சாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-316)

# 4 வாகன பற்றரிகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது




(குருமன்காடு)

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடம் ஒன்றில்வாகன பற்றரிகளை தொடர்ச்சியாகத் திருடிய குற்றச்சாட்டில் இருவரைக் கைது செய்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாகனத் தரிப்பிடத்தில் வாகன பற்றரிகள் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே திவுல்வெவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் இரகசிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன் போது நான்கு வாகன பற்றரிகளுடன் இரு சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் குறித்த குற்றச்செயலுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் முச்சக்கரவண்டி ஒன்றினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை வவுனியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்து வருவதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (6-8-299)

# உரம் வழங்கும் பணி

## கிளிநொச்சியில் முன்னெடுப்பு



(தருமபுரம்)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் ரஷ்ய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட Mop உரம் கிளிநொச்சி ... கமநலசேவை நிலையத்... சேர்ந்த விவசாயிகளுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

சின்ன பல்லவராஜன் கட்டு கமக்காரர் அமைப்பிற்குட்பட்ட 145 விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

நீர்ப்பாசன காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 12 கிலோ வீதமும் மானாவாரி காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதமும் வழங்கப்பட்டது.

பூநகரி கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட 5000 இற்கு மேற்பட்ட விவசாயி... (6-8-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 659





மழை மேலும் வலுத்துக் கொண்டிருந்தது. வாடைக் காற்று விர் என்று அடித்தது. காற்றின் வேகத்தினால் மழைத் தாரைகள் பக்கவாட்டில் திரும்பித் தாக்கின. குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது. வந்தியத்தேவனுடைய உடம்பும் மழையினால் தாக்கப்பட்டுக் குளிரினால் நடுங்கத் தொடங்கியது.

இனி அங்கே நிற்பதில் ஒரு பயனுமில்லை வந்தியத்தேவன் குதிரையை வந்த வழியே திரும்பினான். தன்னுடைய அறிவீனத்தை எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டே வந்தான். இனி மேலாவது இத்தகைய அசட்டுக் காரியங்களில் இறங்காமலிருக்க வேண்டும். நம்முடைய காரியம் உண்டு நாம் உண்டு என்று பார்த்துக் கொண்டு போக வேண்டும்.

குதிரை தன்னுடைய உள்ளுணர்ச்சியைக் கொண்டு வழி கண்டுபிடித்து இடிந்த மண்டபத்துக்கு அருகில் வந்து நின்று ஒரு கனைப்புக் கனைத்தது. அப்போதுதான் வந்தியத்தேவன் சிந்தனை உலகத்திலிருந்து இந்த உலகத்துக்கு வந்தான். குதிரை மீதிருந்து இறங்கினான். அவன் உடுத்தியிருந்த துணிகள் சொட்ட நனைந்து போயிருந்தன. அவற்றை உலர்த்தியாக வேண்டும். அன்றிரவு அந்த இடிந்த மண்டபத்தில் தானும் குதிரையும் தங்கியிருப்பதற்கு இடியாத பகுதி ஏதேனும் இருக்கிறதா என்று சுற்று முற்றும் பார்த்தான்.

வெட்ட வெளியில் கொட்டுகின்ற மழையில் காலிலே நெருப்புச் சுட்டால் எப்படியிருக்கும்? அவ்வாறு வந்தியத்தேவன் துள்ளிக் குதிக்க நேர்ந்தது. அதற்குக் காரணம் வேறொன்றுமில்லை பேயில்லை பிசாசில்லை. ஒரு சின்னஞ் சிறு குழந்தையின் குரல்தான்!

அம்மா! அம்மா! பேயில்லை, பிசாசில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்த வேளையின் அந்த மண்டபத்தில் குழந்தைக் குரல் எப்படிக் கேட்க முடியும்?

அது பேய் பிசாசின் குரல் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? சீச்சீ! பேயும் இல்லை! பிசாசும் இல்லை! பேயும் பிசாசும் பயப் பிராந்தி கொண்ட பேதைகளின் கற்பனை!

"அம்மா! அம்மா! ஊம்! ஊம்!" இது மனிதக் குழந்தையின் குரல்தான்! தாயைப் பிரிந்த சேயின் பயங்கலந்த அழுகைக் குரல்தான்!

இடிந்த மண்டபத்தின் இருளடைந்த பகுதியிலிருந்து வருகிறது. குழந்தை மட்டுந்தான் இருக்கிறதா? வேறு யாரும் இல்லையா?

அம்மா! அம்மா! ஊம்! ஊம்! குரல் வந்த இடத்துக்குச் சமீபத்தில் சென்று வந்தியத்தேவன் யார் அங்கே என்றான்.

யார் அங்கே? என்று குழந்தையின் குரல் எதிரொலித்தது. நான்தான்! நீயார்? இருட்டில் என்ன செய்கிறாய்? வெளியே வா!

வெளியில் மழை பெய்கிறதே! மழை நின்று விட்டது. வா! என் அம்மா எங்கே? அம்மா உனக்குப் பால்வாங்கிக் கொண்டு வரப் போயிருக்கிறாள்.

"இல்லை நீ பொய் சொல்கிறாய்! நீ வெளியில் வருகிறாயா நான் உள்ளே வரட்டுமா?"உள்ளே வந்தால் என் கையிலே கத்தியிருக்கிறது! குத்தி விடுவேன்!"

அடே அப்பா! பெரிய வீரனாயிருக்கிறாயே? வெளியில் வந்துதான் குத்தேன்! நீ யார்? புலி இல்லையே? நான் புலி இல்லை குதிரை!" என்றான் வந்தியத்தேவன். நீ பொய் சொல்கிறாய் குதிரை பேசுமா?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குறையா? நிறையா?



ஒரு கிராமத்தில் ஒரு ஏழை வாழ்ந்து வந்தான். அவன் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவான்.

தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானை குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்துகொண்டே இருக்கும். இப்படியே இரண்டு வருடங்கள் ஆனது.

கேலியைப் பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்து ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். என் குறையை நீங்கள் சரிசெய்யுங்களேன் என்றது.

பானையே! நாம் வரும் பாதையில் உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? என்று அதன் எஜமானன் கேட்டான். உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும்.

அதனால்தான் வழி நெடுவில் பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன.

அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். இறைவனுக்குப் பூஜை செய்கிறேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன் என்று கூறினான்.

இதைக் கேட்ட பானை அதன் வருத்தத்தை நிறுத்திவிட்டது. அடுத்தவர் பேச்சைப்பற்றிக் கவலைப் படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது.

நீதி : மற்றவர்கள் பேசுவதை நினைத்துக் கொண்டு இருந்தால் நாம் நிம்மதியாக வாழமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான எண்ணங்களால் மனம் நிறைந்திருந்தால், நான் செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சி தரும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பித்தா என்ற வாயால் என்னை புகழ்ந்து பாடு

தடுத்தாட் கொண்ட புராணம் என்பது இறை அனுபவத்தை உணர்த்துவது.

சுந்தரமூர்த்தி நாயனார் திருமண பந்தத்தில் இணையும்வேளை, அவரை ஆட்கொள்வதற்காகச் சிவப்பரம்பொருள் கிழவேதியராக வருகின்றார்.

சுந்தரர் எனது அடிமை என்ற வாதத்தோடு வந்தவரின் திருவிளையாடல் தொடங்குகிறது.

வந்திருக்கின்ற வேதியர் சிவன் என்றுணராத சுந்தரர் வேதியருடன் தர்க்கம் புரிகின்றார்.

ஒரு கட்டத்தில் **பித்தா** என்று பேசுகிறார் சுந்தரர்.

அடிமை என்றால் ஆதாரம் வேண்டுமே! திருமண மண்டபத்தில் இருந்தவர்கள் வேதியரிடம் கேட்க; வேதியர் மூல ஓலை என்னிடம் இருக்கிறது. வாருங்கள் என திருவெண்ணை நல்லூர்த் தலத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

என்னே! ஆச்சரியம். ஆலயத்தின் கருவறைக்குள் சென்ற வேதியரைக் காணவில்லை. வேதியராக வந்துற்றவர் சிவன் என்று உணர்ந்த சுந்தரர்; இறைவா! என்னை மன்னித்தருள வேண்டும். தங்களைப் **பித்தா** என்று கூறிவிட்டேனே இதற்குப் பிராயச்சித்தம் ஏது? என்று இறைவனிடம் இரங்குகிறார்.

சுந்தரா! பித்தா என்று அழைத்த வாயால் என்னைப் புகழ்ந்து பாடு எனச் சிவன் அசரீரியாகக் கூற, சுந்தரர் "பித்தா பிறை சூடிப் பெருமானே..."

என்று பாடிப் பரவுகிறார்.

ஆக புகழ்தல், கௌரவித்தல், மரியாதை கொடுத்தல் என்பன இறைவன் முதற்கொண்டு மனிதன் ஈறாக அனைவரையும் வாலாயப்படுத்தக்கூடிய சிறப்பம்சங்கள்.

இதை நாம் கூறும்போது இது எதற்கானதென்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்தியாவுக்குச் சென்றபோது அங்கு அவருக்கு மிக உன்னதமான கௌரவம் வழங்கப்பட்டது.

செங்கம்பள வரவேற்பு, படையினரின் அணிவகுப்பு மரியாதை, இந்தியப் பிரதமர் மோடி உள்ளிட்ட மந்திரி பிரதானிகளின் கௌரவிப்பு என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை மனங்குளிரச் செய்தன.

சுருங்கக்கூறின் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது கூட இத்தகைய மரியாதையை அவர் பெற்றிருக்கவில்லை. தனது பதவியேற்பை மிகவும் எளிமையாகவே செய்து முடித்தார்.

எனினும் சந்தர்ப்பத்தை கனகச்சிதமாகப் பயன்படுத்திய இந்தியா, அவருக்கு மிக உன்னதமான வரவேற்பை வழங்கி; அநுர ஜனாதிபதியாக வெற்றி பெறுவதை இந்தியா விரும்பவில்லை என்ற குற்றச்சாட்டை நீக்கம் செய்தது.

அதாவது பித்தா என்ற வாயால் சுந்தரர் புகழ்ந்து பாடியதுபோல இந்தியாவும் நடந்துகொள்ள "இலங்கை மண்ணில் இந்தியாவுக்கு எதிராக எவரும் செயற்பட அனுமதிக்க மாட்டேன்" என்ற உறுதிமொழியை ஜனாதிபதி அநுர இந்திய தேசத்தில் வைத்து திருவாய் மலர்ந்தருளினார்.

ஆக, ஜனாதிபதி அநுரவிடமிருந்து இந்தியா எதை எதிர்ப்பார்த்ததோ அது கிடைத்துவிட்டது. பிறகென்ன ஒரு பயணத்தோடு எல்லாம் செப்பனாகிவிட்டது.

# ஜனாதிபதி அநுரவுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்களை விடுவிக்குக

## ஜெய்சங்கருக்கு ராகுல் காந்தி கடிதம்

இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு கோரி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடிதம் எழுதியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் ராகுல் காந்தி இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இந்தியாவின் டெல்லிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதியிடம் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தவும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன் மீன்பிடிப் படகுகளையும் இலங்கைக் கடற்படை கைப்பற்றுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், குறித்த மீன்பிடிப் படகுகளை மீட்க இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும் எனவும் இந்திய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத்தை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எழுதியுள்ள கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இலங்கை சிறைகளில் 141 தமிழக மீனவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதாக இந்திய அமைச்சர் கீர்த்தி வரதன் சிங் தெரிவித்துள்ளார்.

இதில் 96 பேர் தண்டனை பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தமிழ்நாட்டு மீனவர்களின் 198 படகுகளையும் இலங்கை அரசாங்கம் கைப்பற்றியுள்ளதாக இந்திய அமைச்சர் கீர்த்தி வரதன் சிங் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகள் மீளவும் நாட்டுக்கு வரவேண்டும்

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கையைச் சேர்ந்த அகதிகள் மீளவும் நாட்டுக்கு வரவேண்டும் என்பதே எங்களின் விருப்பமாகவும் இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் தேசிய அலுவலகத் தலைவராகப் பணியாற்றிய சஞ்சிதா சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை (16.12.2024) சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடந்த காலங்களில் வடக்கு மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளை யு.என்.எச்.சி.ஆர். அமைப்பு வழங்கியதை நினைவுகூர்ந்த ஆளுநர் அதற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

குறிப்பாக இந்தியாவின் தமிழக மாநிலத்தில் தங்கியிருந்த இலங்கை அகதிகள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை மேற்கொண்டதில் யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் பங்கு அளப்பரியது என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குதல், வீடமைப்புத் திட்டம், வாழ்வாதார உதவி மற்றும் வேலை வாய்ப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தி தமிழகத்தில் தற்போதும் தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீள நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்திய ஆளுநர் அதற்குரிய திட்டங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கான ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார். (ம-7,33)

# மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வளர்ச்சி

(கொழும்பு)

இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 5.5 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 29 இலட்சத்து 87,544 மில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியானது இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் 31 இலட்சத்து 51,941 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், விவசாய பொருளாதார நடவடிக்கைகள் 3 சதவீதமாகவும், தொழில்துறை நடவடிக்கைகள் 10.8 சதவீதமாகவும், சேவை பொருளாதார நடவடிக்கைகள் 2.6 சதவீதமாகவும் விரிவடைந்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

# யாழில் காணி உரித்துப் பதிவு தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

காணி உரித்துப் பதிவு தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்டப் பிரதி அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய பிரதி அரசாங்க அதிபர், பொது மக்களுடைய வாழ்க்கையில் மிக முக்கியமான சேவை வழங்கும் உத்தியோகத்தராகப் பதிவாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளனர் எனவும் திருமணம், பிறப்பு, இறப்பு மற்றும் காணிப்பதிவுகள் தொடர்பான சேவையை வழங்கும் நோக்குடன் செயற்படும் பிரதானமான உத்தியோகத்தர்களாகவும் பொது மக்களின் அன்றாட கருமங்களுடன் தொடர்புபட்டுள்ள பொது நலன் சார்ந்தவர்களாக மக்களுக்கு சேவையாற்றும் உன்னதமான பொறுப்புள்ள உத்தியோகத்தர்களாக விளங்குவதாகவும் தெரிவித்தார். மேலும் பதிவாளர் நாயகம் பதவியேற்று ஒரு வருடத்திற்குள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும் எனவும், பதிவாளர் நாயகத்துடன் மாவட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடியுள்ளதாகவும் குறிப்பிட்டதுடன், இச் செயலமர்வானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ளது சிறப்பான விடயம் என்றார்.

மேலும் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இந்தச் சேவையை மேன்மேலும் வினைத்திறனாக வழங்குவதற்கு உந்துதலாக அமைந்துள்ளதாகவும், அதற்காகப் பதிவாளர் நாயகத்திற்கு தமது நன்றியையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி.கருணாரத்ன, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரதிப் பதிவாளர் நாயகங்கள், நில அளவை உத்தியோகத்தர்கள், திணைக்களத்தைச் சேர்ந்த வடக்குக் கிழக்கு மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொன்விழா கொண்டாடும் இந் நிலையில் இப்பல்கலைக்கழகத்தில் முதலாவது பட்டமளிப்பு விழா விபரம் இங்கு தரப் படுகிறது.

1974 இல் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வளாகமாக ஆரம்பித்த இவ் உயர் கல்வி நிறுவனம் 01.01.1979 இல் பல்கலைக்கழக மாகத் தரம் உயர்த்தப் பட்டது. மானிடவியல், விஞ்ஞான பீடங்களுடன் ஆரம்பமாகிய இந் நிறுவனம் 1978 இல் மருத்துவ பீடத்தையும் பெற்று உற்சாகத்துடன் முன்னேறிக் கொண் டிருந்தது.

இந்நிலையில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவை நடத்த வேண்டிய தேவையிருந்தது. பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவாகவும் யாழ்ப் பாணத்தில் இத்தகைய நிகழ்வு முதல் முறையாக இடம்பெறவிருப்பதாலும் பல்வேறு விடயங்களில் தீர்மானங்களும் முன்னாயத்தங்களும் செய்ய வேண்டியிருந்தன.

விழாவின் ஒழுங்குமுறைகள், பட்ட தாரிகள், விரிவுரையாளர்கள், பேராசிரியர் கள், பீடாதிபதிகள், பதிவாளர், துணை வேந்தர், ஆகி யோரின் பட்டமளிப்பு விழா அங்கிகள் போன்ற விடயங்கள் பற்றித் தீர்மானங்கள் எடுக்க வேண்டியிருந்தது. எடுக்கப்படும் தீர்மானங்கள் நீடித்து நிலைக்க வேண்டுமெனக் கவனம் செலுத் தப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் அன்றைய துணைவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் குறிப்பாக இங்கிலாந்தில் மேற் படிப்பை மேற்கொண்டவர்களாகவும் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களில் நீண்ட காலம் பணிபுரிந்தவர்களாகவும் இருந்ததால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா இங்கிலாந்து, இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டமளிப்பு விழாக்களுக்கு ஒத்ததாகவும் மேலும் தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இப் பின்புலத்தில் பட்டமளிப்பு ஊர் வலம், பட்டுக்குடை, ஆலவட் டம் மற்றும் நாதஸ்வரம் சகிதம் வேந்தர் தலைமையில் அமைந்து குத்துவிளக்கு ஏற்றல் நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பமாகும் முறை அறிமுகம் செய்யப்பட்டது.

பட்டமளிப்பு விழா அங்கிகள் நிறம் குறித்து இருவேறு கருத்துகள் பேரவை, மூதவையில் தெரிவிக்கப்பட்டன. ஒரு சாரர் கறுத்த நிறமே பல நாடுகளில் பயன்படுத்தப்படுவதால் கறுப்புநிறமே சிறந்ததென்ற கருத்தை வெளியிட்டனர். மற்றப் பிரிவினர் தமிழர்களின் மங்களகரமான மஞ்சள்-சிவப்பு நிறங்களைக் கொண்டதாக இருப்பது நல்லதெனக் குறிப்பிட்டனர். கருத்துகள் பரிமாற்றத்தின் பின் அங்கிகள் மஞ்சள் -சிவப்பு நிறத்தில் இருக்க வேண்டும் எனத் தீர் மானிக்கப் பட்டது.

பட்டமளிப்பு விழாவைப் பல்கலைக் கழகத்துக்குள் நடத்துவதற்கேற்ற மண்டப வசதி இல்லாததால் விழாவை வீரசிங்க மண்டபத்தில் நடத்துவதெனவும் ஊர் வலம் திறந்த கலையரங்கத்தில் இரு ந்து காங்கேசன்துறை வீதியால் வீரசிங்கம் மண்டபத்தையடைய வேண்டு மெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பட்டமளிப்பு ஊர்வலம் மூன்று பிரிவுகளாக இருந்தது. 1. பட்டம் பெறும் மாணவர்களின் ஊர்வலம். 2. பணிக்குழாம் ஊர் வலம். 3.வேந்தர்தலைமையிலான ஊர்வலம்.

பணிக்குழு ஊர்வலத்தில் உதவிப் பதிவாளர்கள், உதவி நிதியாளர்கள், போதனாசிரியர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள், நிதியாளர் கள், உதவி நூலகர்கள், உதவி விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி, விரிவுரையாளர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், இணைப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் பேராசிரியர்களும் துறைத் தலைவர்களும் இடம்பெற்றனர்.

வேந்தரின் ஊர்வலத்தில் பதிவாளர், கௌரவப்பட்டம் பெறுவோர்கள், பீடாதிபதிகள், துணைவேந்தர், வேந்தர், ஆலவட்டம் பிடிப்பவர்கள், பட்டுக்குடை பிடிப்பவர்கள் புடை சூழ வந்தனர்.

பட்டமளிப்பு மேடையில் வேந்தர், துணை வேந்தர், பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் அமர்ந்திருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா 13 ஆம் திகதி செப்ரெம்பர் 1980 இல் இடம்பெற்றது. வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற முதலாவது பட்டமளிப்பு விழா மேடையில் நான்கு வரிசைகளில் இருந்தவர்களின் விபரங்கள் இணைப்பும் படத்தில் காட்டப்பட் டுள்ளது.

முதல் வரிசையில் இருந்தவர்கள் பதவி வழியாக காட்டப்பட்டு இருப்பதால் அன்று இப்பதவிகளில் இருந்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு, 1. பதிவாளர்-திரு.வி.என் சிவராசா, 2. துணைவேந்தர்-பேராசிரியர் எஸ்.வித்தியானந்தன், 3.வேந்தர் திரு.வீ.மாணிக்கவாசகர், 4.கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே.கைலாசபதி, 5.விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ.தர்மரெத்தினம், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் ஏ.ஏ.கூவர்.

இப் பட்டமளிப்பு விழாவில் முதலில் கௌரவப்பட்டங்கள் வழங்கப்பட்டன. கௌரவப்பட்டம் பெற்றவர்கள் ஒவ்வொருவரினதும் விபரங்கள் அவர்களின் தொழில் மற்றும் சமூகம் சார் பங்களிப்புகள் பற்றி விழாவில் வாசிக்கப்பட்டன. பட்டம் பெற்றவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

8 பேருக்கு நேரடியாகவும் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் ஏ.ஏ.கடவர். இருவருக்கு வருகை தராத நிலையிலும் இருவருக்கு தேகாந்த நிலையிலும் பட்டங்கள் வழங்கப்பட்டன. முதுமாணிப் பட்டம் பெற்றவரும் வித்தகர் பட்டம் பெற்றவர்களும் அரங்கின் முன் வரிசையில் அமர்த்தப்பட்டிருந்தனர். கௌரவப் பட்டம் பெற்றவர்கள் ஒவ்வொருவரின் விபரங்கள் அவர்களின் தொழில் மற்றும் சமூகம் சார் பங்களிப்புக்கள் பற்றி விழாவில் வாசிக்கப்பட்டன. பட்டம் பெற்றவர்களின் விபரங்கள் கீழே தரப்பட் டுள்ளன.

இப் பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் ஏ.டபிள்யூ மயில்வாகனம் அவர்களை விஞ் ஞான பீடாதிபதியான பேராசிரியர் வீ.தர்ம ரெத்தினம் அறிமுகப்படுத்த அவருக்குக் கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது.

மறைந்த பேராசிரியர் பொன்னம்பலம் கனகசபாபதியை பேராசிரியர் ஜே.பி.செல்லையா அறிமுகப்படுத்த அவருக்குத் தேகாந்த நிலையில் விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

பேராசிரியர் கிறிஸ்ரி ஜெயரெத்தினம் எலியேசரை விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ.தர்மரெத்தினம் அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

பேராசிரியர் மில்றோய் அரேரப்பா போலை மருத்துப் பீடாதிபதி பேராசிரியர் ஏ.ஏ.கூவர் அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது. பேராசிரியர் செல்லப்பா சின்னத் துரையை பெண் நோயியல் மற் றும் மகப் பேற்றுத்துறை தலைவரும் பேரா சிரியருமான எம்.சிவசூரியா அறிமுகம் செய்ய அவருக்கு கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

டாக்டர் அப்புக்குட்டி சின்னத் தம்பியை பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றியல் பேராசிரியர் எம்.சிவசூரியா அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது.

பேராசிரியர் வீரக்கொடி எட் மண்ட் மெடோன்சா விஜயராமவை சமுதாய மருத்துவவியல் தலைவர் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் வழங்கப்பட்டது. திரு.ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினத்தை வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் கா.இந்திர பாலா அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது.

வடிதந்திக்கே எதிரிவீர ரஞ்ஜீத சரச் சந்திராவை வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கா.இந்திரபாலா அறிமுகம் செய்யஅவருக்குக்கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. திரு.அபூபக்கர் மொகமது அத்துள் அஸ்ஸை புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் டபிள்யூ.எல். ஜெயசிங்கம் அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது.

வங்கப்பாளையம் செல்லப்பா கவுண்டர் குழந்தைசாமியை கலைப் பீடாதிபதி பேராசிரியர் லு.கைலாசபதி அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.


கலாநிதி நாராயணன் வாணமா மலை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க.சிவத்தம்பி அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங் கப்பட்டது.

நீண்ட காலமாக பேராதனை, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகங்களில் நிர்வாகச் சேவையில் பணியாற்றிய திரு.பொன்னம் பலம் செல்வ நாயகத்தை வரலாற்றுத் துறை தலைவர், பேராசிரியர் க.இந்திர பாலா அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ முதுமாணிப்பட்டம் வழங்கப்பட்டது.

திரு.கனகரெத்தினம்சொர்ண லிங்கத்தை வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் கா.இந்திர பாலா அறிமுகம் செய்ய அவருக் குக் கௌரவ நாடக வித்தகர் பட்டம் வழங் கப்பட்டது.

திரு.முருகேசு ஞானப் பிரகாசத்தை இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசி ரியர் கைலாச நாதக் குருக்கள் அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ சித்தாந்த வித்தகர் பட்டம் வழங்கப்பட்டது.

திரு.இராமசாமி நமசிவாயத்தை தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ இலக்கண வித்தகர் பட்டம் வழங்கப் பட்டது.



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை

திரு.ஏகாம்பரம்பிள்ளை பெரியதம்பிப் பிள்ளையை இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் த.கைலாசநாதக் குருக்கள் அறிமுகம் செய்ய அவருக்குக் கௌரவ இலக்கிய வித்தகர் பட்டம் வழங்கப்பட்டது.

முதலாவது பட்டமளிப்பு விழாவில் ஏழு கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப் பட்டங்களும் ஐந்து கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டங்களும் ஒரு கௌரவ முதுமாணிப் பட்டமும் நான்கு கௌரவ வித்தகர் பட்டங்களும் வழங்கப்பட்டன.

இப்பட்டமளிப்பு விழாவில் 17 கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டமை அதிக மெனக் குறை கூறுபவர்களும் இருந்தனர். பல ஆண்டுகளாகச் செயற்பட்டு வரும் பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழாக்களில் இரண்டு அல்லது மூன்று பேருக்கு மாத்திரம் கௌரவ பட்டங்கள் வழங்குவது வழக்கம். யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவாக இருந்ததால் இப்பல் கலைக் கழகம் பல்வேறு பிரிவினரின் பெரும் பங்களிப்புக்களைக் கௌரவிக்க வேண் டியதாக இருந்தது. தமிழ் இலக்கியம், இலக்கணம், நாடகம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் பங்களித்தவர்களையும் பல் கலைக் கழகம் கௌரவித்தது சிறந்த செயற் பாடு எனப் பலர் பாராட்டு தெரிவித்தனர்.

பல்கலைக்கழக முதலாவது பட்ட மளிப்பு விழாவில் முதுமாணி பட்டம் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:- திருமதி.யோகேஸ்வரி கணேசலிங்கம், திருமதி. ஞானாம்பிகை குலேந்திரன், திரு.துரைராசா மனோகரன், திருமதி.மனோன்மணி சண்முகதாஸ், திருமதி. மௌனகுரு சித்திரலேகா, திரு.சிவனடியான் வன்னியகுலம், திரு.அத்துல காதர் ஷாகுல் ஹமீட், முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள் யாவரும் தமிழ் மொழித் தொடர்பான விடயங்களிலேயே ஆய்வு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து நாகரீகத்தில் பட்டப்பின் டிப்ளோமாவை 34 பேர் பூர்த்தி செய்து பட்டம் பெற்றுள்ளனர். கணிதத்தில் பட்டப் பின்டிப்ளோமாவில் 6 பேர் பட்டம் பெற்றனர்.

பட்டமளிப்பு விழாவில் 191 மாணவர் கள் விஞ்ஞானமானிப் பட்டத்தையும், 96 மாணவர்கள் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளனர்.

இப்பட்டமளிப்பு விழாவில் 17 கௌரவ பட்டங்களும் 6 முது மாணிப் பட்டங்களும் 40 பட்டப்பின் டிப்ளோமா பட்டங்களும் 287 விஞ்ஞான கலை மானிப் பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இப்பட்டமளிப்பு விழாவில் யாழ்ப்பாணப் பல்கலையில் அனுமதி பெற்று இங்கு கற்ற சிங்கள மாணவர்கள் கலவரத்தால் இடம்பெயர்ந்து களனிப் பல்கலைக்கழகத்தில் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப்பட்டங்களையும் பெற்ற னர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பட்டமளிப்பு விழா யாழ்ப்பாணத் தில் நடந்த முதல் பட்டமளிப்பாக இருந் ததால் யாழ்ப்பாண மக்கள் பெரிதும் மகிழ் வுற்றிருந்தனர்.

பட்டமளிப்பு விழா அன்று யாழ்ப்பாண நகரமும் விழாக் கோலம் கொண்டது. பட்ட மளிப்பு விழா யாழ்ப்பாண மக்கள் மத்தி யில் வாரங்களாகப் பேசு பொருளாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

CONVOCATION - 1980
PLATFORM SEATING (Numbered left to right)

As amended on 13.09.80

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4th Row | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 3rd Row | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 2nd Row | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1st Row | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |

Platform

↓

Facing Auditorium

1st Row:
1. Registrar
2. Vice-Chancellor
3. Chancellor
4. Dean/ Arts
5. Dean/ Science
6. Dean/ Medicine

2nd Row:
1. Pandit.E.Namasivayam
2. Mr.M.Gnanapirakasam
3. Mr.P.Selvanayagam
4. Mr.James.T.Rutnam
5. Dr.V.C.Kulandaiswamy
6. Dr.A.Sinnathamby
7. Prof.Milroy Paul
8. Prof. A.W.Mailvaganam

3rd Row:
1. Prof. N.Sreeharan
2. Prof.K.Theivendrarajah
3. Prof.V.K.Ganeshalingham
4. Prof.K.Kailasanatha Kurukkal
5. Prof.K.Inrapala
6. Prof.C.Sivagnanasundram
7. Prof.M.Sivasuriya
8. Prof.J.B.Selliah

4th Row:
1. Mr.R.S.Thamkiah
2. Mr.V.Sivasamy
3. Mr.N.Balakrishnan
4. Dr.S.T.Parameswaran
5. Prof.P.Palasundarampillai
6. Prof.D.Ranadas
7. Prof.K.Sivathamby
8. Prof.W.R.Jeyasingham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலிக் காய்ச்சல்...

அவர் மேலும் தெரிவிக்கையில், எலிக்காய்ச்சல் காரணமாக தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 23 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 6 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 9 நோயாளர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் இந்நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை. இதுவரை யாழ்.மாவட்டத்தில் இந்நோய் காரணமாக 8 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காகத் தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இதுவரை ஏறத்தாழ 6000 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன என்றார். (ம-7,33)

## மோட்டார்...

களின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த 9ஆம் திகதி இரவு 10 மணிக்கு, வேலைக்குச் சென்று விட்டு வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபோது தண்ணீரூற்று, ஊற்றங்கரை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதில் நடக்க முடியாத நிலையில் அவர் அவ்விடத்தில் படுத்திருந்துள்ளார்.

மறுநாள் காலையில் ஆலய தலைவர் அப்பகுதிக்கு வந்தபோதே இவர் விபத்துக்குள்ளானமை தெரிய வந்தது.

இதனையடுத்து அவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அன்றே யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)

## எமது ஆட்சியில்...

அமைச்சர்களின் ஊழல்கள் பற்றி தேடப்பட்டதாகத் தெரிவித்த அவர்,

எங்கள் அரசாங்கத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் கல்வித்தகைமை தொடர்பில் பெரும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அமைச்சர்கள் மற்றும் அரசாங்கத்திலுள்ளவர்களின் கல்வித் தகுதிகள் தேடப்படவில்லை என்பது ஒருபுறம் எங்களுக்கு மகிழ்ச்சி. அவர்களின் திருட்டையே தேடினார்கள்.

எங்களின் திருட்டுகள் தொடர்பில் கண்டுபிடிக்க முடியாததால், கல்வித் தகுதியில் இவ்வளவு ஆர்வம் காட்டுவது சற்று முன்னேற்றமாகவே கருதலாம் என்றார். (ம-7)

## அநுரவுக்கு...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் நேற்று முன்தினம் புதுடில்லியில் வெளியிட்ட கூட்டறிக்கையின் மூலம் இந்திய - இலங்கை ஒத்துழைப்பை மேலும் ஸ்திரப்படுத்தி வலுப்படுத்த முடியும். இதுவரவேற்கத்தக்க விடயம் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

திருகோணமலையைப் பிராந்திய ஆற்றல் மற்றும் கைத்தொழில் மையமாக அபிவிருத்தி செய்து பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை பாராட்டுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## யாழின்...

மாறும், பாதகமான காரணிகள் உள்ளனவா? என்பது தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

பரிசோதனைகளின்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தீங்கு விளைவிக்கக் கூடிய அளவில் காற்றின் தரம் காணப்படுமாயின் அது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் பொறிமுறையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராயுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த வைத்தியர் உமாசுகி நடராஜா என்பவர் தாக்கல் செய்துள்ள மனு, நிஷங்க பந்துல கருணாரத்ன, சசி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே, நீதியரசர்கள் ஆயத்தினால் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 26 இலட்சம்...

கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இவர் யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரதான வர்த்தகர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை அவரை இன்று 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

## நீண்ட...

வேண்டும் என இலங்கை - இந்திய ஜனாதிபதிகள் கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை புதுடில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, இந்திய - இலங்கை இடையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவது மற்றும் பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்துக் கருத்துப் பரிமாறப்பட்டது.

சிநேகபூர்வ சந்திப்பின் பின்னர் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு இராப் போசன விருந்து வழங்கினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர். (ம-7)

## இலங்கை ரூபாயின் பெறுமதி குறைவு

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று சற்றுக் குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணயமாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 286.44 ரூபாயாகவும், 295.09 ரூபாயாகவும் உள்ளது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.12.17 — சீட்டிழுப்பு இலக்கம் 5688 — Q 6 8 4 8 7 0
அத சம்பத — Q 4 8 7 0 — சீட்டிழுப்பு இலக்கம் 263

தன நிதானய — திகதி - 2024.12.17 — சீட்டிழுப்பு இலக்கம் - 1718 — J 22 30 53 81 J — Double Chance 09815

மெகா பவர் — திகதி 17/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2036 — T 14 20 22 37 80 — 174389

லக்கி 7 VIP — திகதி 2024.12.17 — சீட்டிழுப்பு இலக்கம் 514 — V 0 5 6 3 0 2 V

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3930 — சீட்டிழுப்பு திகதி 17.12.2024 — Y 41 59 73 75 — Y 125647

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.12.17 — சீட்டிழுப்பு இலக்கம் 997 — துலாம் 19 31 56 60 துலாம் — 142282 — 20

உத்தியோகபூர்வ முடிவுகள் — 17.12.2024 — வெற்றி வாரம் 396 — L 8 2 6 9 6 2 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,399,412.80

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2662 — சீட்டிழுப்பு திகதி 2024.12.17 — தினம் செவ்வாய்க்கிழமை — 16 53 73 75 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,400,936.80

சனிதா — 17.12.2024 — வெற்றி வாரம் 4823 — 04 26 39 70 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,670,911.60

சசிரி — வெற்றி வாரம் 580 — 17.12.2024 — செவ்வாய்க்கிழமை — 12 35 45 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

சீட்டிழுப்பு வாரம் 4374 — சீட்டிழுப்பு திகதி 17.12.2024 — தினம் செவ்வாய்க்கிழமை — 03 34 37 48 — மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00


கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — I 22 10 45 48 53 — சீட்டிழுப்பு வாரம் 1838 — 17.12.2024 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,505,411.40

அட கோடீபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம்: 2488 — சீட்டிழுப்பு திகதி: 2024.12.17 — 14 39 51 64 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,959,350.40


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாள்

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 19.11.2024 (செவ்வாய்க்கிழமை)
அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் திரு.அழகசுந்தரம் கிருபாகரன்

குடும்பத்தின் குல விளக்கே
விழி நிகர்த்த பேருறவே
அன்பின் திருவுருவே – எம்மை
அணைத்துக் காத்த பெருமகனே
வழியேதும் தெரியாமல் – நாம்
விழி மூடி அழுகின்றோம்.
நாட்கள் முப்பத்தொன்று கடந்தாலும்
உம் நினைவோடு நாம் வாழ்வோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (19.12.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **துர்க்கா மணி மண்டபத்தில் (நல்லூர்)** நடைபெற வுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

(C-1809)

077 722 5292

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.